1971 ஜூன் 24]

Dr. H. V. HANDE: May I know whether the report has been sent to Central Government? Because there is a controversy and a news item had appeared in the press that the Centre had not received the report? May I know from the Hon. Chief Minister whether he has sent the report to the Home Minister and Prime Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுக்கு அனுப்பாமல் எப்படி இருந்திருக்க முடியும்?

Attack on police personnel at Kivalur

* 37 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a Police Inspector of Kivalur and a party of policemen were attacked by a group of persons on 14–10–1969; and

(b) if so, whether any investigation has been ordered and the details of the investigation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) இது குறித்துப் புலனாய்வு மேற்கொள்ள ஆணையிடப் பட்டது; நாகப்பட்டினம், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பு 22 குற்றவாளிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றவாளிகள் மீது சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் குற்றங்களைச் சாட்டி, நாகப்பட்டினம் குற்றத்துறைத் துணை நீதிபதியிடம் இவ்வழக்கை மாற்றினார். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் குற்றவாளிகளென தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 3 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

Prosperity Brigade

* 38 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to form Prosperity Brigade in the Districts also; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) சீரணி இந்த மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சீரணி மூலம் கடந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள வேலைகளைச் செய்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

DR. H. V. HANDE : Though the scheme was originally started with a good idea by late revered Anna, now in practice there is a feeling among people that it has become a party affair. Will the Hon. Minister concerned take pains to see that at least that impression is dispelled from the minds of people? Will he take concrete steps by which he can convene the House that it is a non-partism group?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கழக அரசு செய்யும் சில நல்ல திட்டங்களில் எப்போதுமே கொஞ்சம் சந்தேகப்படுகின்றவர்களுக்குச் சீரணி ஆரம்ப காலத்தில் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது. இப்போது சீரணித் துறையினர் மூலம் நிறைவேற்றி வரும் பணியினைக் கண்ட பிறகு சந்தேகப்பட்டவர்கள் தங்கள் சந்தேகப் போக்கில் இருந்து திருந்தி வருகிறார்கள். இது கட்சி அடிப்படையில் நடைப்பெறக் கூடாது என்பதில் அரசு அழுத்தந் திருத்தமான நம்பிக்கை வைத்திருக்கிறது. எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் இதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். சிலபேர் இதிலே சேர என்ன காரணத்தாலோ தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் ஒத்துழைத்து நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்தால் அதை அரசு ஏற்கத் தயாராக இருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : சீரணி வேலைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் மத்திய அரசு தமிழக அரசுக்குக் கடிதம் மூலம் வேண்டுகோள் ஏதாவது விடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அண்மையில், நமது மாநிலத்தில் சீரணி ஆற்றி வரும் பணியினைப் பற்றி விவரமாக அறிவிக்குமாறும், பிற மாநிலங்களில் இதனை நடைமுறைக்குக் கொண்டு வர இருப்பதாகவும் கூறி, மத்திய அரசில் இருந்து கடிதம் வந்தது. அதற்குப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சீரணி என்பது இலவசமாக உழைப்பைத் தானம் செய்கிற அமைப்பு என்று கருதுகிறேன். இப்போது வேலை இல்லாதவர்கள் ஏராளமாக இருக்கும் நேரத்தில், உழைப்பு நிறைய தேங்கியிருக்கும் நிலையில் அதைப் பயன்படுத்த முடியாத அளவில் இருக்கும்போது உழைப்பை இலவசமாகப் பெற்றுக் காரியம் செய்வது என்பது கெடுதல் செய்வதாகாதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சீரணித் திட்டமே காந்தியத் தத்துவங்களை எப்போதுமே நடைமுறையில் ஆற்றிவர வேண்டுமென்ற எண்ணத்தோடு தென்னாட்டுக் காந்தி அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. யாரும் பலவந்தமாக தங்களுடைய உழைப்பைத் தரவேண்டுமென்று அரசு சொல்ல வில்லை. விருப்பம் உள்ளவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தில் தங்கள் உழைப்பைத் தருவதில் யாருக்கும் ஒரு கெடுதலும் ஏற்படாது.

1971 ஜூன் 24]

திருமதி. த. ந. அனந்தநாயகி : சீரணித் தொண்டர்கள் இலவசமாகச் சேவை செய்கிறார்கள் என்று சொல்லும் அதே நேரத்தில் அவர்களுக்கு தினம் மூன்று ரூபாய் செலவாகிறது என்பது உண்மையா? என்ன செலவு ஆகியிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கடந்த நான்காண்டுக் காலத்தில் சீரணித் துறை மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் மதிப்பு ரூ. 1,09,79,947 ஆகும். இதிலே அரசாங்கம் ஏற்றுக்கொண்டது ரூ. 41,61,156 ஆகும். இந்தச் செலவு நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கான சாமான்கள் வாங்கவும், சீரணித்தொண்டர்களுக்கு உணவு அளிக்கக்கூடிய வகையிலும் ஆகியிருக்கிறது. ஆகவே, சீரணி மூலமாகப் பெறப்பட்ட உழைப்பின் மதிப்பு ரூ. 68,18,791 ஆகும். அந்தத் தொண்டர்களுக்கு உணவு அளிப்பதைப்பற்றி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அடிக்கடி சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாள் பூராவும் வேலை செய்யும் அவர்களுக்கு உணவுக்காக செலவாவதைப் பெரிது படுத்தாமல் அவர்களுடைய உழைப்பை மனிதாபிமானத்துடன் பாராட்ட வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, சீரணித் தொண்டர்கள் கிராமப் புறத்திலே அபிவிருத்தி வேலைசெய்கிற காரணத்தால், சீரணித் தலைவர்களையும் மாவட்ட அபிவிருத்தி மன்ற கூட்டத்தில் அங்கம் பெற வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அது பற்றி பரிசீலிக்கப்படும்.

* 39 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether financial assistance has been sought for from the Union Government to run the Prosperity Brigade during 1969–70–71 ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, சீரணித் திட்டம் செயல்படுத்த மத்திய அரசிடமிருந்து எந்த விதமான நிதி உதவியும் மாநில அரசு கோரவில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, சீரணிப்படைக்கு தமிழக அரசு கடந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் செலவிட்டது என்று அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கெனவே கூறிய பதிலில் சொல்லியிருக்கிறேன். கடந்த ஆண்டு மட்டும் 19 லட்சம் ரூபாய் சீரணிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, சீரணித்தொண்டர்களை அரசாங்க அலுவலகங்களில், அரசாங்க உத்தியோகங்களில் நியமிக்கும் நேரத்தில், ராணுவ வீரர்கள் போன்றவர்களுக்கு முதலிடம் தரப்படுவது போல், சீரணித் தொண்டர்களுக்கும் பிரப்பரன்ஸ் (preference) தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.